**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்................................................... தந்தை /கணவர் பெயர்..........................................

கிராமம்.......................................................... இனம்....................................................................

தாலுக்கா........................................................... மொழி.....................................................................

மாவட்டம்........................................................ தொழில்................................................................

---

# G.W.O.P. No. 366/2022

# 09.11.2023

**ம.த.சா. 1 - திரு. சதீஷ்குமார், த/பெ.பாலகிருஷ்ணன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் சென்னை, மாங்காட்டில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 26.02.2016 தேதியிட்ட திருமண அழைப்பிதழ் ம.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எங்களின் திருமண புகைப்படம் (வரிசை 1) மற்றும் குறுந்தகடு(வரிசை 1) ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. யாஷ்வியின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் ம.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எனது மனைவி மற்றும் குழந்தையுடன் உள்ள புகைப்படம் (வரிசை 1) மற்றும் குறுந்தகடு (வரிசை 1) ம.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. மைனர் யாஷ்வியின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட சாதிச்சான்றிதழ் ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. மைனர் யாஷ்வியின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. எங்களின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட திருமணப் பதிவின் extract ம.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.